<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 76/2022</u>

பெயர் : ஜெயசங்கர் P.W.1.

த/பெ. : ராமசாமி

தேதி : 20.01.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை:–</u>

1. இந்த வழக்கு எனது தாயாரால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு விசாரணையின் போது எனது தாயாரின் பொது அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது தாயாரின் வயோதிகத்தின் காரணமாக அவரால் நீதிமன்றத்திற்கு வந்து வழக்கினை நடத்த இயலாததால் அவருடைய பொது அதிகாரம் பெற்ற முகவராக நான் இந்த வழக்கினை நடத்துகிறேன். இந்த வழக்கு விபரங்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தின் புல எண் 276/2 ஆகும். அதன் விஸ்தீரணம் 2 ஏக்கர் 64 செண்ட் ஆகும். தாவா சொத்திற்கு எதன் அடிப்படையில் நாங்கள் உரிமை கோருகிறோம் என்றால் நாங்கள் பரம்பரையாக சாகுபடி செய்து வருகின்ற உரிமையிலும், குத்தகை பதிவேட்டின் அடிப்படையிலும் உரிமை கோருகிறோம். கைலாச அய்யரின் சொத்துரிமை தொடர்பான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் வருவாய் ஆவணங்களை தான் பார்த்துள்ளேன்.

2. வாசாஆ 3 ஏற்பட்ட காலத்தில் கைலாச அய்யருக்கு தாவா சொத்து உரிமை மூலம் குறித்த ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் சிட்டா, அடங்கல் போன்ற வருவாய் ஆவணங்களை தான் நான் பார்த்துள்ளேன். கைலாச அய்யர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. கைலாச அய்யர் எந்த வருடம் இறந்தார் என்றால் 1994, 1995 ஆண்டு வாக்கில் இறந்தார். குறிப்பாக எந்த வருடம் என்று நினைவில் இல்லை. வாசாஆ 3ன் அடிப்படையில் எனது தாயார் கைலாச அய்யரிடம் கிரய ஆவணம் ஏற்படுத்திக்கொண்டாரா என்றால் இல்லை. தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாசாஆ 3 ஏற்படுவதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தற்போது வரை தாவா சொத்தை பொருத்து எத்தனை ஆவணங்கள், யார் யார் பெயரில் ஏற்பட்டுள்ளன என்பதை தெரிந்துகொண்டீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் மூலம்

செலுத்தப்பட்ட கட்டணங்கள் எதற்காக செலுத்தப்பட்டது என்றால் நீர் ஆதாரத்திற்காக செலுத்தப்பட்டது.

3. மேற்படி ஆவணத்தில் நீர் ஆதாரங்களுக்காக செலுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் கைலாச அய்யருக்காக செலுத்தப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கினை எனது தாயார் எந்த தேதியில் தாக்கல் செய்தார்கள் என்றால் 24.08.2017 அன்று தாக்கல் செய்துள்ளார். 2010 முதல் 2017 வரை என்ன வகையான பயிர் செய்தோம் என்றால் ஒரு போக சாகுபடியாக நெல் பயிர் செய்தோம். 2010 முதல் 2017 வரையிலான காலங்களுக்கு சிட்டா, அடங்கலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2017 முதல் தற்போது வரை தாவா சொத்தில் சாகுபடி செய்து வருகிறீர்களா என்றால் வரப்பு, வாய்கால்களை ஆக்கிரமித்து என்னை சாகுபடி செய்யவிடாமல் தடுத்து வருகிறார்.

4. தாவா சொத்திற்கு தென்புறம் அமைந்துள்ள 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தில் அவர் மண் கொட்டி நிரப்பி உள்ளார் என்றால் சரிதான். எனக்கு தமிழ் நன்றாக எழுத, படிக்க தெரியும். வழக்குரையில் 8 பத்தியில் பிரதிவாதிகள் வாதிமீது உள்ள முன்விரோம் காரணமாக கடந்த 05.08.2017 ஆம் தேதி அன்று தாவா நிலத்தில் பிரதிவாதிகள் இரவோடு இரவாக வேண்டுமென்றே அத்துமீறி நுழைந்து வரப்பினை வெட்டிசேதப்படுத்தி லாரி மூலம் மண் கொட்டி பரப்பி உள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்கள் வரப்பினை மண்ணால் நிரப்பி சேதப்படுத்தியுள்ளார். எனது வழக்குரையில் சொல்லியுள்ளவைகளுக்கு முரணாக நான் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளகூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கிலும், மேற்கிலும், கிழக்கிலும் எனது குடும்பத்திற்கு சொந்தமான நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை.

5. தாவா சொத்தில் தற்போது மணல் கொட்டப்பட்டு உயரமாக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்துக்களும் பிரதிவாதிகளுக்கு சொந்தமான தென்புறம் உள்ள சொத்துக்களும் ஒன்றினைக்கப்பட்டு கம்பி வேலியிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது சகோதரி திருவெண்காடு, உட்கடையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அவருக்கு கண்ணன் என்ற இளஞ்செழியன் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். இளஞ்செழியன் மீது பிரதிவாதிகளால் வழக்கு சொத்து சம்பந்தமாக கம்பி வேலியை அகற்றியுள்ளார் என்ற புகாரின் அடிப்படையில் செம்பனார் கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அவர் மீது முதல் தகவல் அறிக்கை 339/2017 என

பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கானது மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தால் Quash செய்யப்பட்டுவிட்டது. எந்த தேதியில் Quash செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இளஞ்செழியனுக்கு தான் தெரியும்.

6. தற்போது வழக்கு சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 10.12.1969 ஆம் தேதியில் மயிலாடுதுறை இணை சார்பதிவாளர் –2 ஆவண எண் 442/1970 ன் மூலமும், 08.02.1970 தேதியில் ஆவண எண் 443/1970 ன் மூலமும் முகம்மது இப்ராஹிம் ராவுத்தர் என்பவர் அவரது மகளான பாத்தமுத்து ஜகரான்பீவி அவர்களுக்கு கொடை ஆவணம் மூலம் வழக்கு சொத்துக்களை கொடுத்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. கடந்த 21.06.1983 தேதியில் மேற்படி பாத்தமுத்து ஜகரான்பீவி அவர்கள் வழக்கு சொத்தினை பொருத்து ஆவண எண் 887/1983 ன் மூலம் இலியாஸ் என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. கடந்த 22.04.1992 ஆம் தேதியில் வழக்கு சொத்துக்களை இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி நஸ்சருல்லா அவர்கள் ஆவண எண் 388/1992 ன் மூலம் மேற்படி இலியாஸ் என்பவரிடமிருந்து கிரயம் பெற்று அது முதல் நாளது தேதி வரை வழக்கு சொத்தினை அவரது அனுபவத்திலும், வசத்திலும் வைத்து அனுபவத்து வருகிறார் என்றால் சரியல்ல.

7. வாசாஆ 3 ன் ஏற்பட்டுத்தப்பட்ட காலத்தில் கைலாச அய்யருக்கே தாவா சொத்தில் எவ்வித பாத்தியமும், அனுபவமும் இல்லாததால் அவரால் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் வாசாஆ 3 ஆவணமானது சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தின் மூலம் எனது தாயாருக்கு தாவா சொத்தானது வசம் கிடைக்கப்பெற்றது என சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல. கைலாச அய்யருக்கு சொந்தமான நிலம் என நான் கூறுவதால் அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்பதால் தாவா சொத்து உரிமையாளருக்கு எதிராக கோரப்படும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் நிலைநிறுத்தத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் பெற்ற பிறகும், அதற்கு முன்பு அவரது கிரய முன்னவர்களும் வருவாய் ஆவணங்களில் மாற்றம் ஏற்படுத்தாமல் அனுபவித்து வந்ததை எனது தந்தை அனுகூலமாகக்கொண்டும், எனது தந்தை பட்டாமனியக்காரராக இருந்ததாலும் அவரது அதிகாரத்தின் அடிப்படையில் கைலாச அய்யர் பெயரிலேயே வருவாய் ஆவணங்களை ஏற்படுத்திக்கொண்டு இந்தவழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நாளது தேதி வரை தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியின் பெயரில் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்பதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.